DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.22

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | செல்வகணேஷ் | Caste: | |
| Father's Name: | பாண்டி | Calling: | அறிவியல் அலுவலர், மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகம். |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 17.10.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2024ம் தேதி அமர்வு நீதிபதி பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களிடமிருந்து கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 வழக்கில் தொடர்புடைய கருப்பு நிற NOTHING என்ற மொபைல் போனானது முத்திரையிடப்பட்ட பிளாஸ்டிக் பெட்டியில் வைத்து கமுதி காவல்நிலைய மு.நி.கா. 2413 திரு நடராஜன் என்பவர் மூலமாக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக பெறப்பட்டது. UFED 4PC என்ற மென்பொருள் கருவியின் மூலமாக மேற்கூறிய மொபைல் போனின் உள்நினைவக தரவுகள் மீட்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதில் 29.01.2024 அன்று மேற்கூறிய மொபைல் போனில் சேமிக்கப்பட்டிருந்த

புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் மீட்டெடுக்கப்பட்டன. மேற்கூறிய புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் கோப்பு பாதைகளின் அடிப்படையில் அவை மொபைல் போனில் உள்ள கேமராவின் மூலம் பதிவு செய்யப்பட்டது என்று கருதப்படுகிறது. மேலும் மீட்டெடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் வாட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டாகிராம் செயலிகள் மூலம் பகிரப்பட்ட தகவல்கள் மொபைல் போனில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட தரவுகளில் இருந்து கண்டறியப்படவில்லை. மேற்கூறிய மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்ட மொபைல் போன் மற்றும் சிம்கார்டில் மீட்டெடுக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் மேற்கூறிய புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் MDU/CF/107/2024 என்று குறியீடு செய்யப்பட்ட டிவிடியில் பதிவு செய்யப்பட்டு 30.08.2024 ம் தேதியிட்ட அறிக்கையுடன் இணைத்து அமர்வு நீதிபதி, பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கூறிய புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் MDU/CF/107/2024_PHY என்று குறியீடு செய்யப்பட்ட மற்றொரு டிவிடியில் பதிவு செய்யப்பட்டு இயற்பியல் துறை தடய அறிவியல் துறை சென்னைக்கு உண்மைத்தன்மை பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டது. நான் உதவி இயக்குநர் ராஜேஷ் மற்றும் துணை இயக்குநர் காஜா மைதீன் ஆகியோர் மேற்பார்வையில் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த அறிக்கைதான் என்னிடம் காட்டப்படும் தடய அறிவியல் அறிக்கை. அந்த ஆய்வறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு 24.10.2024 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் கடிதம் மற்றும் ஆய்வறிக்கை எங்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதுதான். அது **அ.சா.ஆ.33**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

**இல்லை**

Sd./C.Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)